# முத்தமிழ் விழா 2024 க்கான போட்டிகள்

## பேச்சு, இசை, கட்டுரை, உரையாடல்; போட்டிகள் பற்றிய விபரங்கள்

**நாள்:** சனிக்கிழமை, 13.04.2024, காலை 8:30 மணி - பிற்பகல் 2:30 மணி

**இடம்:** Wesley College, 620, High Street Road, Glen Waverley, 3150

1. இப்போட்டிகளில், தற்போது அவுஸ்திரேலியப் பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் சிறுவர்கள் எல்லோரும் பங்குபற்றலாம்.

2. போட்டிகளில் பங்குபற்றுவதற்கென்று தயாரிக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவங்களிலேயே விண்ணப்பம் செய்தல் வேண்டும். விண்ணப்பப் படிவம் முழுமையாக நிரப்பப்பட வேண்டும். பின்வரும் இணையத்தளம் அல்லது மின்னஞ்சல் ஊடாக தமது விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வைக்கலாம்:

   மின்னஞ்சல் (Email): **competition@vta.org.au** தொலைபேசி: **0400 415 105**

   இணையத்தளம்: **http://competition.vta.org.au**

3. போட்டிகளில் பங்குபற்றுவதற்கான கட்டண விபரம்:
   - ஒரு குடும்பத்திற்கான பதிவுக் கட்டணம்: **$5.00**
   - ஒவ்வொரு போட்டிக்குமான கட்டணம்: **$5.00**

   உதாரணம்:
   - ஒரு பிள்ளை பேச்சுப் போட்டியிலும் பாட்டுப்போட்டியிலும் பங்குபற்றினால் மொத்தம் $15.00 செலுத்த வேண்டும்.
   - ஒரு குடும்பத்திலிருந்து இரண்டு பிள்ளைகள் பேச்சுப் போட்டியிலும் பாட்டுப்போட்டியிலும் பங்குபற்றினால் இரு பிள்ளைகளுக்குமான மொத்தக் கட்டணம் $25.00 மட்டுமே.

4. **விண்ணப்ப முடிவுத் திகதி 29.03.2024**

   **எதுவித காரணம் கொண்டும் போட்டி நடைபெறும் நாளன்று விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளபடமாட்டாது.**

5. **பிரிவுகளின் விபரங்கள்**:

| Category Name | | Date of Birth | |
|---|---|---|---|
| | | From | To |
| மழலையர் பிரிவு | M - Malalaiyar | 01/01/2019 | 31/12/2020 |
| பாலர் பிரிவு | P – Palar | 01/01/2017 | 31/12/2018 |
| ஆரம்பப் பிரிவு | B - Beginner | 01/01/2015 | 31/12/2016 |
| கீழ்ப் பிரிவு | L – Lower | 01/01/2013 | 31/12/2014 |
| மத்திய பிரிவு | I - Intermediate | 01/01/2011 | 31/12/2012 |
| மேற்பிரிவு | S – Senior | 01/01/2009 | 31/12/2010 |
| அதிமேற்பிரிவு | AS - Advanced Senior | 01/01/2006 | 31/12/2008 |

6. **பேச்சுப் போட்டி**:

மழலையர் பிரிவு, பாலர் பிரிவு, ஆரம்பப்பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு, அதிமேற்பிரிவு ஆகிய எல்லாப் பிரிவுகளுக்கும் பேசுவதற்கான விபரங்கள் இங்கு இணைக்கப்பட்டுள்ளன.

7. **இசைப் போட்டி**:

மழலையர் பிரிவு, பாலர் பிரிவு ஆரம்பப்பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு அதிமேற்பிரிவு ஆகிய எல்லாப் பிரிவுகளுக்கும் பாடுவதற்கான விபரங்கள் இங்கு இணைக்கப்பட்டுள்ளன. குறித்த பாடல்களை மனனம் செய்து இசையோடு பாடுதல் வேண்டும். இராகமும் தாளமும் தரப்பட்டிருந்தால், தரப்பட்ட இராகத்திலும் தாளத்திலும் மட்டுமே இசையமைத்துப் பாடவேண்டும்.

8. **கலந்துரையாடல் போட்டி**:

இப்போட்டி கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு, அதிமேற்பிரிவு ஆகிய பிரிவுகளுக்கு மட்டுமே நடாத்தப்படவுள்ளது. உரிய விபரங்கள் இங்கு இணைக்கப்பட்டுள்ளன.

9. **கட்டுரைப் போட்டி**:

இப்போட்டி ஆரம்பப் பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு, அதிமேற்பிரிவு ஆகிய பிரிவுகளுக்கு மட்டுமே நடாத்தப்படவுள்ளது. உரிய விபரங்கள் இங்கு இணைக்கப்பட்டுள்ளன.

# பேச்சுப் போட்டி - மழலையர் பிரிவு

(Date of birth between 01/01/2019 and 31/12/2020)

அனைவருக்கும் வணக்கம்,

**நாம் தமிழர்**

நாம் தமிழர்! தமிழ் எங்கள் தாய் மொழி!

அம்மா அப்பா,

அண்ணா அக்கா,

தம்பி தங்கை - எல்லோரையும்

தமிழில் அழைப்போம்!

தமிழில் பேசுவோம்! தமிழில் பாடுவோம்!

தமிழில் பாடி ஆடுவோம் - நம் இனிய

தமிழை நேசிப்போம் - நாம்

தமிழர் என்பதை மறந்திடோம்!

நன்றி!

வணக்கம்!

# பேச்சுப் போட்டி - பாலர் பிரிவு

(Date of birth between 01/01/2017 and 31/12/2018)

அனைவருக்கும் வணக்கம்,

**தமிழ் எங்கள் தாய்மொழி**

நாம் தமிழர்.

தமிழ் எங்கள் தாய்மொழி.

நாம் எங்கு வாழ்ந்தாலும் எமது தாய்மொழி தமிழே. அவுஸ்திரேலியாவில் வாழ்கின்ற எமக்கு முதன்மொழி ஆங்கிலம் ஆனால் நமது தாய்மொழி தமிழே. முதன்மொழி மாறலாம் ஆனால் தாய்மொழி மாறாது. மாறவே மாறாது.

நாம் நமது வீட்டில் தமிழ் பேசுவோம். நண்பர்களுடன் தமிழ் பேசுவோம். உறவினர்களுடன் தமிழ் பேசுவோம். நாள்தோறும் தமிழிலே பேசுவோம்.

எமது தாயைப் போற்றுவது போல, தாய்மொழியையும் போற்றுவோம்!

“சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே - அதைத்

தொழுது படித்திடடி பாப்பா”

நன்றி!

வணக்கம்!

# பேச்சுப் போட்டி - ஆரம்பப்பிரிவு

(Date of birth between 01/01/2015 and 31/12/2016)

அனைவருக்கும் வணக்கம்,

**ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்**

"ஒழுக்கம் விழுப்பம் தரும்" என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க சிறார்களான எமக்கு ஒழுக்கம் மிக அவசியம். மனிதனை விலங்கில் இருந்து வேறுபடுத்திக் காட்டுவது ஒழுக்கமே ஆகும். ஒழுக்கம் என்பது எண்ணத்தாலும், சொல்லாலும், செயலாலும் தூய்மையாக நடந்து கொள்வதாகும். இவ்வொழுக்கமே மனிதனை தெய்வமாகவும் உயர்த்தும் தன்மை பெற்றிருப்பதால் அது உயிரைக் காட்டிலும் உயர்வானது.

உடலைத்தூய்மையாக வைத்திருக்க தூய உடை, சத்துள்ள உணவு, உடற்பயிற்சி ஆகியன தேவைப்படுவது போல மனத்தைத் தூய்மையாக வைத்திருக்க ஒழுக்கம் இன்றியமையாதது. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என்பது போல சிறிய வயதில் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து வளராமல் விட்டால் பிற்காலத்தில் அது பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும். காந்தி அடிகள் ஒழுக்கத்தைப் பேணியவர். வள்ளுவர் முதல் வள்ளலார் வரை ஒழுக்கத்தை உயர்த்திப் போற்றுகின்றனர்.

"பொய் சொல்லக் கூடாது பாப்பா,

என்றும் புறம் சொல்லலாகாது பாப்பா"

என்ற பாரதியாரின் பாட்டிற்கமைய சிறுவர்களாகிய நாமும் **ஒழுக்கத்தைக்** கடைப் பிடித்து, இந்த பூமியில் வாழ்வாங்கு வாழ்வோமாக.

நன்றி!

வணக்கம்!

# பேச்சுப் போட்டி - கீழ்ப்பிரிவு

(Date of birth between 01/01/2013 and 31/12/2014)

குழுமியிருக்கும் அனைவருக்கும் அன்பு வணக்கம்,

**கூடி வாழ்ந்தால் கோடி நன்மை**

மனிதன் வாழ்கின்ற சமூகத்திலே ஒருவரை ஒருவர் தங்கி வாழுதல், நடைமுறை. கூட்டாக செயற்படுவதற்கு நாம் ஒருவருக்கு ஒருவர் உதவியாக இருக்க வேண்டும். உதவி என்று கேட்டு வருபவர்களுக்கு மட்டுமல்லாது நாமே தேவை அறிந்து உதவியைச் செய்ய வேண்டும். அவ்வாறு நாங்கள் செய்கின்ற போது அது அவர்களுக்கு பெரும் நன்மை தரும். இதையே வள்ளுவர்,

*"காலத்தினாற்செய்த நன்றி சிறிதெனினும்*

*ஞாலத்தின் மாணப் பெரிது"*

என்று கூறினார்.

நாம் மற்றவர்களிடமிருந்து உதவியைப் பெற்றால் அவர்களுக்கு நன்றி பகிர்தல் மிகவும் அவசியம் அது அவர்களின் மனங்களை குளிரவைக்கும். அதேபோல் அவர்களுக்கு ஒரு தேவை வருகின்ற போது நாமும் தயங்காமல் முன் வந்து அவர்களுக்கு உதவி புரிய வேண்டும்.

ஒரு சமூகமானது நிச்சயம் கூட்டாக ஒருவருக்கு ஒருவர் உதவி புரிந்து செயற்பட்டால் மட்டுமே உயர முடியும். இதையே *"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை"* என்பார்கள்.நன்றி!

**வணக்கம்!**

# பேச்சுப் போட்டி - மத்தியபிரிவு

(Date of birth between 01/01/2011 and 31/12/2012)

குழுமியிருக்கும்  நடுவர்களுக்கும் அவையோருக்கும் அன்பு வணக்கம்,

## செய்வன திருந்தச் செய்

நாம் வாழ்க்கையில் ஒரு காரியத்தை திறமையாகச் செய்வதற்கு மூன்று படிமுறைகள் அவசியம். அவையாவன திட்டமிடுதல், தயார்ப் படுத்தல், செயற்படுத்தல் என்பனவாகும்.

*எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்*
*எண்ணுவம் என்பது இழுக்கு*

ஒரு விடயத்தை செய்வதற்கு முன் அதனை எவ்வாறு செய்யவேண்டும் என்ற ஒழுங்கான திட்டமிடுதல் அவசியம். காரியத்தை தொடங்கியபின் அதன் வழிமுறைகள் பற்றி சிந்திப்பது குற்றம் என்கிறார் வள்ளுவர். திட்டமிடுதலின் போதே அந்த காரியத்தை எங்களால் செய்ய முடியுமா என்ற தீர்மானத்தையும் எடுக்கவேண்டும்.

திட்டமிடுதலை தொடர்ந்து தயார்ப்படுத்தல் மிகவும் முக்கியம். "*முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்*" என்பார்கள். நாங்கள் திட்டமிட்ட வழிமுறைகளை முயற்சி செய்யாவிட்டால் எங்கள் இலக்கை அடையமுடியாது. நாங்கள் எவ்வளவு தடவை ஒரு விடயத்தை பயிற்சி செய்கிறோமோ அது நாம் செய்யப் போகின்ற விடயத்தை மெருகூட்டும். இது விளையாட்டாக இருக்கலாம், பேச்சுப் போட்டியாக இருக்கலாம், இல்லை கலை நிகழ்ச்சியாக இருக்கலாம் அத்தனைக்கும் இது பொருந்தும்.

இறுதியில் செயற்படுத்தல். இதுவே நாங்கள் இதுவரை செய்த படிமுறைகளுக்கான பலனை அடையும் தருணம்; அரங்கேற்றும் வேளை. முதல் இரண்டு விடயங்களையும் நாங்கள் சரியாக செய்திருந்தால் செயல்பாடு வெற்றியையே தரும். அதுமட்டுமல்லாது செயற்பாட்டின் பெறுபேற்றையும் நாங்கள் மனம் தளராமல் ஏற்கவேண்டும். காரணம் திட்டமிடலும் அதற்கான முயற்சியும் மட்டுமே எங்கள் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது பெறுபேறு அல்ல.

ஆகையால் திட்டமிட்டு, தயார்ப்படுத்தி செயற்படுத்துவதன் மூலம் "செய்வன திருந்தச் செய்", என்ற முதுமொழிக்கு அமைய, நாம் செய்வனவற்றில் வெற்றி பெறலாம்.

நன்றி
வணக்கம்

# பேச்சுப் போட்டி - மேற்பிரிவு

(Date of birth between 01/01/2009 and 31/12/2010)

குழுமியிருக்கும் நடுவர்களுக்கும் அவையோருக்கும் அன்பு வணக்கம்,

**பண்பாய் ஒழுகுவோம்**

ஒரு மனிதன் தன் வாழ்வில் உயர் நிலை அடைவதற்கும், சமுதாயம் போற்றும் ஒருவராக வருவதற்கும் அவனுடைய வாழ்க்கைப் பண்புகள் மிக முக்கியமானது.

ஒருவன் தன் திறமைகளை மட்டுமே வளர்த்துக் கொண்டால் போதாது அவன் தன்னுள் உயர்ந்த பண்புகளையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

*"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்*
*இழுக்கா இயன்றது அறம்"*

என்ற வள்ளுவன் குறள் வாழ்க்கைக்கு தேவையான நல்ல பண்புகள் என்ன என்பதைக் கூறுகிறது. இதுவே அறம் என்கிறது.

அழுக்காறு, பிறரைப் பார்த்து பொறாமைப் படுதல். மற்றவர் வளர்ச்சி அல்லது அவருக்குக் கிடைக்கும் பாராட்டைக் கண்டு பொறாமைப் படாது தன்னை உயர்த்துவது எப்படி என்பதில் கவனம் செலுத்தவேண்டும். திறமை எங்கு இருந்தாலும் அதனைத் தட்டிக் கொடுக்க வேண்டும். இன்னொருவர் திறமையைப் போற்றுவது எமது ஆற்றலைக் கூட்டுமேயன்றி குறைக்காது.

அவா என்றால் அதிகம் ஆசைப்படும் இயல்பு அதாவது பேராசை. ஆசை என்பது அவசியம்தான். ஒரு விடயத்தில் ஆசை கொண்டால் அதை அடைய வேண்டும் என்ற தூண்டுதல் எமக்கு உற்சாகத்தை ஊட்டும், முயற்சியைக் கூட்டும். ஆனால் ஆசைப்படுகின்ற விடயம் வாழ்க்கைக்கு பலன் தருவதாக இருந்தால் மட்டுமே அது நன்மை தரும். அதுவே பேராசையாக மாறினால் அது எம்மைத் தீயவழியில் இட்டுச் செல்லும்.

வெகுளி என்பது கோபம் அல்லது சினம். திரிபுணர்ச்சி, மாயத் தோற்றம் உண்டு பண்ணுதல், மறதி ஏற்படுதல், பகுத்தறியும் தன்மை அற்றுப் போதல் இத்தனைக்கும் காரணம் கோபம். "*காக்க காவாக்கால்தன்னையே கொல்லும் சினம்*" ஒருவர் தன்னைக் காக்க வேண்டும் என்றால் கோபம் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் அது கோபம் கொள்பவரைக் கொன்று விடும் என்று கோபத்தின் விளைவை மேலும் விரிவுபடுத்தியுள்ளார் வள்ளுவர்.

ஒரு கண நேரம் கோபத்தை அடக்கி வைப்பவன் ஒரு நாளின் துயரத்தை அடக்கியவனாவான் என்கிறது முதுமொழி.

அடுத்து இன்னாச்சொல் அதாவது கீழ்மையான சொல், தீய சொற்கள், துன்பம் தரும் பேச்சு இவை எமது ஒழுக்கத்திற்குக் களங்கம் விளைவிக்கும்.

"ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயால் சொலல்."

ஒழுக்கமுடையவர்கள் மறந்தும் தீய சொற்களை தம் வாயால் சொல்லமாட்டார்கள் என்று பரிமேலழகர் இந்தக் குறளிற்கு விளக்கம் தந்துள்ளார்.

தவறி வார்த்தைகளில் வன் சொற்களைப் பேசி விட்டால், அது மற்றவர் மனங்களைக் காயப்படுத்திவிடும். அதனைச் சரிசெய்தல் மிகக் கடினம் ஆகும்.

பொறாமை, பேராசை, கோபம், தீய சொற்கள் பேசுதல் ஆகியவற்றை விலக்கியதே அறம். அந்த அறத்தைக் கொண்ட வாழ்க்கைநெறியை வாழ்ந்தால், நாம் சிறந்த பண்புள்ளவர்களாக வருவோம்.

நன்றி!
வணக்கம்!

# பேச்சுப் போட்டி - அதிமேற்பிரிவு

(Date of birth between 01/01/2006 and 31/12/2008)

குழுமியிருக்கும் நடுவர்களுக்கும் அவையோருக்கும் அன்பு வணக்கம்,

**யாதும் ஊரே யாவரும் கேளிர்**

உலக சகோதரத்துவத்தை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உலகிற்குச் சொல்லித் தந்தவன் தமிழன். உலகம் வியந்து பார்க்கும் ஒப்பற்ற தமிழ்க் கவிதைகளைப் படைத்து உலக அரங்கில் தமிழருக்கென்று தனித்துவத்தைப் பெற்றுத் தந்தவர்கள் பலர். தமிழர்கள் சிந்தனை ஆற்றல் மிக்கவர்கள் என்பது உலக மக்கள் அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட செய்தி. நமது பரிணாம வளர்ச்சி அறிவியல், சமூகவியல், உளவியல், தத்துவம் சார்ந்ததாகவே இருந்திருக்கிறது என்பதற்கு இலக்கியங்களில் பல ஆதாரங்கள் உள்ளன.

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவது அன்றே

இந்தப் புறநானூற்றுப் பாடல் கணியன் பூங்குன்றனார் என்கிற புலவரால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட பாடலாகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதிய இந்தப் பாடல் இன்றைய காலத்துடனும் ஒத்துபோகின்றது என்றால் மிகப்பெரிய ஞானப் பார்வையுடன் வாழ்ந்துள்ளான் தமிழன் என்பது உறுதியாகின்றது.

அனைத்து ஊரும் நம் ஊரே அனைத்து மக்களும் நமது உறவினர்களே. உலக மக்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதை வலியுறுத்துவதாக இந்தப் பாடல் இருக்கின்றது. நன்மை தீமை அடுத்தவரால் வருவது அல்ல. நாம் செய்யும் செயலே நம் இன்பத்துக்கும் துன்பத்துக்கும் காரணம். உன் அனுமதி இல்லாமல் உன்னை யாரும் காயப்படுத்தி விட முடியாது என்பதை “தீதும் நன்றும் பிறர் தர வாரா” என்ற வரி குறிக்கின்றது. துன்பமும் ஆறுதலும் மற்றவர்கள் தருவதில்லை.

இவ்வுலகில் பிறப்பெடுத்த அனைத்து உயிர்களும் சமமாக மதிக்கப்பட வேண்டியன. இரக்கம் காட்டுதல், மரியாதை செலுத்துதல், சமத்துவம் பேணல் மற்றும் உதவி செய்தல் போன்ற மனிதப் பண்புகளே மனிதனை விலங்குகளிடம் இருந்து வேறுபட்டவனாக, உயர்ந்தவனாக மாற்றுகின்றன. "அரிது அரிது மானிடராய் பிறத்தலரிது" என்பதற்கிணங்க அனைத்து பிறப்புக்களிலும் உயர்ந்த பிறப்பாக மானிடராய்ப் பிறப்பெடுத்துள்ள அனைவரும் சமத்துவத்தைப் பேணி மற்றவர்களிற்கு தீங்கிழைக்காமல் வாழ்வது அவசியமாகும்.

மிக முக்கியமாக ஆறறிவு படைத்த மனிதனானவன் ஏனைய ஐந்தறிவு படைத்த உயிர்களைத் துன்புறுத்தாமல் வாழ்வது அவசியமாகும். நாம் வாழும் இவ்வுலகமானது பல்வேறு வகைப்பட்ட சிந்தனைகளைக் கொண்ட, பல தரப்பட்ட மத நம்பிக்கைகளைப் பின்பற்றுகின்ற வெவ்வேறு வகைப்பட்ட மொழிகளை தம் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் பிரிவினரால் உருவமைக்கப்பட்டுள்ளது.

காலம் காலமாக சகோதரத்துவத்துடனும், சமத்துவத்துவத்துடனும் வாழ்ந்த மக்கள் இன்று மொழி, மதம், சாதி, ஏழை, பணக்காரன் என பல்வேறு விதமான தடைகளால் பிரிக்கப்பட்டு தனித்தனியாக வாழும் முறைமைக்கு மாற்றமடைந்துள்ளனர். "ஒன்றே குலம்; ஒருவனே தேவன்" என்ற கூற்றிற்கமைய அனைத்து மக்களும் தாம் மனித இனத்தை சேர்ந்தவர்கள் என்ற உயரிய மனநிலையோடும், உலகிலுள்ள அனைத்து மதங்களும் ஒருவனையே இறைவனாகக் கொண்டுள்ளன என்ற புரிந்துணர்வோடும் நடந்து கொள்ள வேண்டும். ஏழை எளியவர்களையும் வருமானத்தால் பின்தங்கியவர்களையும் அரவணைத்து உதவி புரிதல் வேண்டும். சாதி இன மத பேதங்களைத் தவிர்த்து சமூக நீதியை நிலைநாட்ட வேண்டும்.

இந்த அழகிய பரந்த பூமி எங்கள் அனைவருக்கும் பொதுவானது. எல்லோருமே சந்தோசத்துடனும் நிம்மதியாகவும் வாழ்வதற்கு ஒவ்வொருவருடைய நம்பிக்கைகளையும் கோட்பாடுகளையும் மதித்து வாழ்வதே நல்லது. சிறுவயதில் இருந்தே மற்றவர்களின் உணர்வுகளுக்கும் மதிப்பளித்து வாழவேண்டியது எம் அனைவரதும் கடமையாகும்.

நன்றி!

வணக்கம்!

# இசைப் போட்டி - மழலையர்பிரிவு

(Date of birth between 01/01/2019 and 31/12/2020)

வண்ணத்துப் பூச்சி
வண்ணத்துப் பூச்சி
பறக்குது பார்
பறக்குது பார்

அழகான செட்டை
அழகான செட்டை
அடிக்குது பார்
அடிக்குது பார்

பூக்களின் மேலே
பூக்களின் மேலே
பறந்து போய்
பறந்து போய்

தேனினைக் குடித்து
தேனினைக் குடித்து
களிக்குது பார்
களிக்குது பார்

சிவப்பு மஞ்சள்
கறுப்பு வெள்ளை
பொட்டுக்கள் பார்

தொட்டதும் விரைவில்
ஒட்டுது பார்.

# இசைப் போட்டி - பாலர் பிரிவு

(Date of birth between 01/01/2017 and 31/12/2018)

ஓடி விளையாடு பாப்பா! - நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா!
கூடிவிளையாடு பாப்பா! - ஒரு
குழைந்தையை வையாதே பாப்பா!

சின்னஞ் சிறுகுருவி போலே - நீ
திரிந்து பறந்துவா பாப்பா!
வன்னப் பறவைகளைக் கண்டு - நீ
மனதில் மகிழ்ச்சிகொள்ளு பாப்பா!

காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு - என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா!

# இசைப் போட்டி - ஆரம்பப் பிரிவு

(Date of birth between 01/01/2015 and 31/12/2016)

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லை அகன்று
சுடர்க தமிழ்நாடே!
வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழியே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

# இசைப் போட்டி - கீழ்ப் பிரிவு

(Date of birth between 01/01/2013 and 31/12/2014)

இராகம்: மாயாமாளவ கௌளை

தாளம்: ஆதி

இயற்றியவர்: முத்துத்தாண்டவர்

**பல்லவி:**

ஆடிக்கொண்டார் அந்த வேடிக்கை காணக்கண்

ஆயிரம் வேண்டாமோ.

**அனுபல்லவி**

நாடித் துதிப்பவர் பங்கில் உறைபவர்

நம்பர் திருச்செம்பொன் அம்பலவாணர்

**சரணம்**

ஆர நவமணி மாலைகள் ஆட ஆடும் அரவம் படம் விரித்தாட

சீரணி கொன்றை மலர்த் தொடை ஆடச் சிதம்பரத் தேர் ஆட

பேரணி வேதியர் தில்லை மூவாயிரம் பேர்களும் பூசித்துக் கொண்டு நின்றாட

காரணி காளி எதிர்த்து நின்றாடக் கனகசபை தனிலே

# இசைப் போட்டி - மத்திய பிரிவு

(Date of birth between 01/01/2011 and 31/12/2012)

ராகம்: சண்முகப்பிரியா

தாளம்: ஆதி

இயற்றியவர் : பாபநாசம் சிவன்

**பல்லவி**

சரவணபவ என்னும் திருமந்திரம் தனை

சதா ஜபி என் நாவே (ஓம்)

(சரவணபவ)

**அனுபல்லவி**

புரமெரித்த பரமன் நெற்றிக்கண்ணில் உதித்த

போதஸ்வரூபன் பொற்பாதம்தனைப் பணிந்து

(சரவணபவ)

**சரணம்**

மண்மிசை கிடந்துழல் பிறவிப் பிணியைத் தீர்க்கும்
மாயை அகலப் பேரின்ப நெறியில் சேர்க்கும்

தண்மதி நிகர் குளிர் கருணை நிலவு மிழும்

ஷண்முக ப்ரிய ஷடாக்ஷர பாவன

(சரவணபவ)

# இசைப் போட்டி - மேற் பிரிவு

(Date of birth between 01/01/2009 and 31/12/2010)

ராகம்: கீரவாணி

தாளம்: ஆதி

இயற்றியவர் : பாபநாசம் சிவன்

**பல்லவி**

தேவி நீயே துணை-தென் மதுரை

வாழ் மீனலோசனி (தேவி)

**அனுபல்லவி**

தேவாதி தேவன் சுந்தரேசன்

சித்தம் கவர் புவன சுந்தரி அம்ப (தேவி)

**சரணம்**

மலையத்வஜன் மாதவமே காஞ்சன

மாலை புதல்வி மஹாராணி

அலைமகள் கலைமகள் பணி கீர்வாணி

அமுதனைய இனிய முத்தமிழ் வளர்த்த (தேவி)

# இசைப் போட்டி - அதிமேற் பிரிவு

(Date of birth between 01/01/2006 and 31/12/2008)

ராகம்: காம்போதி

தாளம்: ஆதி

இயற்றியவர்: ஊத்துக்காடு வேங்கட சுப்பய்யர்

**பல்லவி**

குழலூதி மனமெல்லாம் கொள்ளைகொண்ட பின்னும்

குறையேதும் எனக்கேதடி சகியே

**அனுபல்லவி**

அழகான மயில் ஆடவும்

மிக அழகான மயில் ஆடவும் (மிக மிக)

காற்றில் அசைந்தாடும் கொடி போலவும்

**சரணம்**

அகமகிழ்ந்திலகும் நிலவொளி தனிலே

தனை மறந்து புள்ளினம் கூவ

அசைந்தாடி மிக இசைந்தோடி வரும்

நலம் காண ஒரு மனம் நாட

தகுமிகு எனஒரு பதம் பாட

தகிட ததிமி என நடமாட

கன்று பசுவினமும் நின்று புடை சூழ

என்றும் மலரும் முக இறைவன் கனிவோடு (குழலூதி )

மகர குண்டலமாடவும் (கண்ணன்)

அதற்கேற்ப மகுடம் ஒளி வீசவும்

மிகவும் எழிலாகவும் (தென்றல்)

காற்றில் மிளிரும் துகிலாடவும் (அகமகிழ்ந்திலகும்)

# நேர்முகக் கலந்துரையாடல்

**கீழ்ப்பிரிவு** (Date of birth between 01/01/2013 and 31/12/2014),

**மத்தியபிரிவு** (Date of birth between 01/01/2011 and 31/12/2012),

**மேற்பிரிவு** (Date of birth between 01/01/2009 and 31/12/2010),

**அதிமேற்பிரிவு** (Date of birth between 01/01/2006 and 31/12/2008)

விதிமுறைகள்:

1. போட்டியாளர் கீழே தரப்பட்டுள்ள 5 தலைப்புகளில் ஒன்றை தமது கலந்துரையாடலுக்கு தெரிவு செய்துகொள்ளலாம்
2. கலந்துரையாடல் 5 நிமிடத்திற்கு குறையாமலும், 7 நிமிடத்திற்கு கூடாமலும் இருத்தல் வேண்டும்
3. போட்டியாளர் விரும்பினால், எடுத்துக்கொண்ட தலைப்பைப் பற்றி சிறு விளக்கம் கொடுக்கலாம் (2 நிமிடத்திற்குள்)
4. போட்டியாளர் நடுவர்களை அணுகி அவர்களை வாழ்த்தும் போதே போட்டி ஆரம்பமாகிறது என்பதை கவனத்தில் கொள்ளவும்
5. கலந்துரையாடல் முழுவதும் தமிழில் இருக்க வேண்டும்.
6. கலந்துரையாடல் தலைப்புகள்:
    - **நான் அண்மையில் மேற்கொண்ட சுற்றுலாப் பயணம்**
    - **வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் ஏன் தமிழ் பேசவேண்டும்**
    - **புத்தகக் கல்வி மட்டும் ஒருவரின் முன்னேற்றத்துக்குப் போதுமானதா?**
    - **ஒன்றிற்கு மேற்பட்ட மொழிகளைத் தெரிந்திருப்பதின் நன்மைகள் / தீமைகள்.**
    - **பல்கலாச்சார சமுதாயத்தின் நன்மை/தீமைகள்.**

# கட்டுரைப் போட்டி

## ஆரம்பப் பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு, அதிமேற்பிரிவு

1. போட்டியாளர்கள்; கீழே தரப்பட்டுள்ள வயது அடிப்படையில் உரிய தலைப்பைத் தெரிவு செய்து தங்களை தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும்.
2. போட்டிக்கான பிரிவுகளும் உரிய தலைப்புகளும்:

| வயது | தலைப்பு | சொற்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஆரம்பப் பிரிவு (Date of birth between 01/01/2015 and 31/12/2016) | எனது பிறந்த நாள் பரிசு | 50 - 75 சொற்கள் |
| கீழ்ப் பிரிவு (Date of birth between 01/01/2013 and 31/12/2014) | நான் முதல் முதலாகக் கற்றுக் கொண்ட புதிய திறன் | 75 - 100 சொற்கள் |
| மத்திய பிரிவு (Date of birth between 01/01/2011 and 31/12/2012) | சமூகசேவையின் முக்கியத்துவம் | 100 - 150 சொற்கள் |
| மேற்பிரிவு (Date of birth between 01/01/2009 and 31/12/2010) | அவுஸ்திரேலியாவில் தமிழை VCE வரை படிப்பதனால் கிடைக்கும் பயன்கள் | 150 - 200 சொற்கள் |
| அதிமேற்பிரிவு (Date of birth between 01/01/2006 and 31/12/2008) | நாம் தமிழ் சமுதாயத்திற்கு செய்யக் கூடிய பணிகள் | 200 - 250 சொற்கள் |

# தேர்வுப் படிமானம்

## Song (இசை)

| படிமானம் | சுருதி | தாளம் | இராகம் | மனனம் | பாவம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| புள்ளிகள் | 25 % | 25 % | 25 % | 15% | 10 % | 100% |

## Speech (பேச்சு)

| படிமானம் | உச்சரிப்புத் திறன் | மனனம் செய்யும் திறன் | தொனி | நிலை முகபாவம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| புள்ளிகள் | 25% | 30% | 25% | 20% | 100% |

## Conversation (கலந்துரையாடல்)

| படிமானம் | அறிமுகப்படுத்தல் | கேள்விக்கு ஏற்ற பதில் கொடுத்தல் | ஆங்கிலம் கலவாமல் பேசுதல் | இலக்கணப் பிழையின்மை | முகபாவம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| புள்ளிகள் | 10% | 50% | 15% | 15% | 10% | 100% |

## Essay writing (கட்டுரை)

| படிமானம் | கட்டுரையின் ஒழுங்கமைப்பு | உள்ளடக்கம் | மொழியாற்றல் | ஏழுத்துப்பிழையின்மை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| புள்ளிகள் | 30% | 30% | 25% | 15% | 100% |

THIS PAGE HAS INTENTIONALLY BEEN LEFT BLANK

# முத்தமிழ் விழா 2024 க்கான போட்டிகள்

# விண்ணப்பப் படிவம்

பேச்சு, இசை, கட்டுரை, உரையாடல் போட்டிகளுக்கான விண்ணப்பப் படிவம்

**போட்டி நாள்:** சனிக்கிழமை, 13.04.2024, காலை 8:30 - மாலை 2:30 மணி

**போட்டி இடம்**: Wesley College, 620, High Street Road, Glen Waverley, 3150

**விண்ணப்ப முடிவுத் திகதி 29.03.2024**

For the **online Application form**, Scan the following QR Code.

**http://competition.vta.org.au**

| Participant Details | |
|---|---|
| Given Name | |
| Last Name | |
| Gender | ☐ Male ☐ Female |
| Date of Birth (dd/mm/yyyy) | |
| is the child attending Tamil School? | ☐ Yes ☐ No |
| If Yes, Tamil School Name | |
| Is the child attending Day school? | ☐ Yes ☐ No |
| If yes, Day school Name | |
| If yes, Day school Grade | |

| Parents Details | | | |
|---|---|---|---|
| Parent First Name | | | |
| Parent Last Name | | | |
| Mobile Phone | | | |
| Home Phone | | | |
| Email | | | |
| Home Address | | | |
| State | | Postcode | |

பங்குபற்றும் பிரிவு: (சரியான பிரிவினை தெரிவு செய்யவும்)

| Category Name | | Date of Birth | | √ |
|---|---|---|---|---|
| | | From | To | |
| மழலையர் பிரிவு | M - Malalaiyar | 01/01/2019 | 31/12/2020 | |
| பாலர் பிரிவு | P - Palar | 01/01/2017 | 31/12/2018 | |
| ஆரம்பப் பிரிவு | B - Beginner | 01/01/2015 | 31/12/2016 | |
| கீழ்ப் பிரிவு | L - Lower | 01/01/2013 | 31/12/2014 | |
| மத்திய பிரிவு | I - Intermediate | 01/01/2011 | 31/12/2012 | |
| மேற்பிரிவு | S - Senior | 01/01/2009 | 31/12/2010 | |
| அதிமேற்பிரிவு | AS - Advanced Senior | 01/01/2006 | 31/12/2008 | |

பங்குபற்றும் போட்டி:

☐ பேச்சு ☐ இசை ☐ கட்டுரை ☐ நேர்முக-கலந்துரையாடல்

மேற்குறிப்பிட்ட விபரங்கள் யாவும் உண்மையென இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

பெற்றோர் கையொப்பம்: --------------------------------------------------- திகதி: ----------------------------------------